அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2025

## தமிழ் - ஆண்டு 10

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

உலகில் தோன்றும் எந்தவொரு நாகரிகமும் அதனடியாய்த் தோன்றும் மொழியும் இலக்கியமும் காலந்தோறும் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டே தீரும். இதனையே, “பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகையினானே” என நன்னூல் உரைக்கிறது. இவ்வாறானதொரு நீண்டகாலத் தொடரோட்டத்தில் இலக்கியமானது காலத்தால் முந்திய இலக்கியங்களின் செல்வாக்கினைப் பெற்றிருத்தல் இயல்பாகும். முன்னோரிடமிருந்து பெறப்படும் வாழ்வியல் முறைகளே ‘மரபு’ எனப்போற்றப்படுகிறது. அவ்வகையில், கடந்த நூற்றாண்டின் மிகச் சிறப்புப் பெற்ற கவிஞரான பாரதி, கால மாற்றங்களுக்கேற்ப இயைந்து போனாலும் தன் தனித்தன்மையை இழந்துவிடாத பண்போடு பாக்களைப் பாடியுள்ளார். அவர் தனது நீண்டகாலச் சிந்தனை வளத்தின் மூலம் பெற்றுக்கொண்ட தமிழ்மொழி அறிவாலும் அதன் பரந்த இலக்கியச் செழுமையாலும் தனக்கெனத் தனிப்பெரும் பாவுலகை அமைத்துக்கொண்டார். காலங்காலமாக ஆளுமை செலுத்தி வந்த செய்யுள் இலக்கியத்தை மக்கள் வயமாக்கி அனைத்து மக்களும் படித்து இன்புறுமாறு செய்த பெருமை பாரதியாரையே சேரும்.